நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 3 ம் நாள் திங்கள்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.751/2026
CNR.No.TNTS02-002122-2026
IN
குற்ற எண்.270/2026

மாரியப்பன், 50/26,
த.பெ.இசக்கி ... மனுதாரர்

/எதிர்/

காவல் ஆய்வாளர்,
தென்காசி காவல் நிலையம்,
குற்ற எண்.270/2026. ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது இன்று விசாரணைக்காக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கணேசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில் இரு தரப்பையும் கேட்டு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

**உத்தரவு**

1. **மனுவின் சுருக்கம்** –

மனுதாரர் மேற்படி வழக்கில் எதிரி என்றும், மேற்படி வழக்கில் மனுதாரரிடமிருந்து பணம் ரூ.1,50,000/- எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், மேற்படி தொகையானது மனுதாரருக்குரியது என்றும், மனுதாரர் தினக்கூலி என்றும், மனுதாரரின் அன்றாட செலவினங்களுக்கு மேற்படி தொகை தேவைப்படுவதாகவும், எனவே, மேற்படி பணத்தை மனுதாரர் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடக் கேட்டு மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் தரப்பில் கிரைய ஒப்பந்தம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரைய ஒப்பந்தம் பின்வருமாறு, கிரைய ஒப்பந்தம் 2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 17 ம் தேதி தென்காசி மாவட்டம், தென்காசி தாலுகா, தென்காசி கஸ்பா, தைக்கா தெருவில், 10A நம்பர் வீட்டில் வசித்து வரும் திரு.இசக்கி அவர்கள் குமாரர் திரு.E.மாரியப்பன் (ஆதார் அட்டை எண்.530814252561) அவர்கள் 1 வது

பார்ட்டியாகவும், விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, வடக்குத் தேவதானம் கிராமம், கோட்டை மாடசாமி கோவில் தெருவில், 316ம் நம்பர் வீட்டில் வசித்து வரும் திரு.தொந்தியப்பன் அவர்கள் குமாரர் திரு.T.சுரேஷ்குமார் (ஆதார் அட்டை எண்.508210708683) அவர்கள் 2வது பார்ட்டியாகவும் ஆக நாம் இரண்டு பார்ட்டிகளும் சேர்ந்து எழுதிக் கொண்ட கிரைய ஒப்பந்தம் என்னவென்றால் இதன் தபசில் கண்ட சொத்து நம்மில் 1வது பார்ட்டியின் பெயருக்கு 26.02.2025ம் தேதியில் சேத்தூர் சார்பதிவாளர் அலுவலகம் 1 புத்தகம் 2025ம் வருடத்திய 766ம் நம்பர் கிரைய ஆவணத்தின் மூலமாக பாத்தியப்பட்டு மேற்படியார் ஆண்டனுபவித்து வருகிற இதன் தபசில் கண்ட சொத்தினை நாளது தேதியில் நம்மில் 1வது பார்ட்டி நம்மில் 2வது பார்ட்டிக்கு மொத்தக் கிரையமாக ரூபாய்.10,00,000/- (ரூபாய் பத்து லட்சம்)க்கு விற்க கிரையம் பேசி அது வகைக்கு நம்மில் 1,2 வது பார்ட்டிகள் சம்மதித்து நாளது தேதியில் நம்மில் 2வது பார்ட்டியிடமிருந்து நம்மில் 1வது பார்ட்டி அட்வான்ஸாக பெற்றுக் கொண்டது ரூபாய் 2,00,000/- (ரூபாய் இரண்டு லட்சம்), மேற்படி அட்வான்ஸ் தொகை ரூபாய் 2,00,000/- போக மீதி கிரைய தொகை ரூபாய் 8,00,000/- (ரூபாய் எட்டு லட்சம்)ஐ நம்மில் 2வது பார்ட்டி நம்மில் 1வது பார்ட்டிக்கு இரண்டு மாத வாய்தாவான எதிர் வரும் 16.06.2026ம் தேதிக்குள் கொடுத்துவிட வேண்டியது, மேற்படி மீதி கிரையத் தொகையினை நம்மில் 1வது பார்ட்டி பெற்றுக் கொண்டு நம்மில் 2வது பார்ட்டி செலவில் இதன் தபசில் கண்ட சொத்தினைப் பொருத்து நம்மில் 2வது பார்ட்டியின் பெயருக்கோ அல்லது அவர் குறிப்பிடும் வேறு நபர்களின் பெயருக்கோ எழுதும் ஒரு பத்திரமாகவோ அல்லது பல கிரையப் பத்திரமாக தேவைப்பட்டால் மேற்படி 1வது பார்ட்டி கையெழுத்து செய்து பதிவு செய்து கொடுத்துவிட வேண்டியது. இதன் தபசில் கண்ட சொத்தினைப் பொருத்து எந்தவிதமான வில்லங்கமும், விவகாரமும் இல்லையென்று நம்மில் 1வது பார்ட்டி உறுதியாகக் கூறுகிறார். அப்படி ஏதேனும் வில்லங்க விவகாரங்கள் இருந்து அதனால் நம்மில் 2 வது பார்ட்டிக்கு நஷ்ட செலவுகள் ஏற்பட்டால் அதனை நம்மில் 1வது பார்ட்டி தன் சொந்த செலவில் தீர்த்து தந்து போக வேண்டியது.

<u>2. அரசு தரப்பு பதிலின் சுருக்கம்</u> –

மேற்படி வழக்கானது கோப்புக்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தில்

நிலுவையில் இருந்து வருவதாகவும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்து ரூ.1,50,000/- தேர்தல் நடத்தை விதிகளை மீறி செயல்பட்டதால் மேற்படி சொத்து பறக்கும்படை தேர்தல் அலுவலர்களால் பிடிக்கப்பட்டது என்றும், மேலும், சொத்தினை பிணையில் கொடுத்தால் நீதிமன்ற விசாரணையின் போது ஆஜர்படுத்த மாட்டார் என்றும், எனவே, சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. தீர்வு** –

வழக்கு ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது, மனுதாரர் இவ்வழக்கின் எதிரி ஆவார். இந்த வழக்கானது U/s.170(1)(ii) BNS, Sec.123(1)(A)(b) RP Act ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட சொத்தானது பி.ஆர்.எண்.212/2026 பிரகாரம் பெறப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், மேலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரைய ஒப்பந்தத்தை பார்வையிடும் போது மேற்படி ஒப்பந்தத்தில் 17.04.2026 ம் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், முதல் தகவல் அறிக்கையை பார்வையிடும் போது அதில் குற்ற சம்பவ நாள் 20.04.2026 ம் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் மேற்படி பணத்தை கொண்டு வந்துள்ளார் என்பது வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யும் போது தெரிய வருகிறது. மேலும், மனுதாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்பது தெரிய வரும் நிலையிலும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மேலும் மேற்படி பணம் அன்றாட செலவினங்களுக்கு மனுதாரருக்கு தேவைப்படுவதாக மனுதாரர் மனுவில் கூறியுள்ள நிலையிலும், தக்க ஜாமீன்தாரர் அடிப்படையில் மனுதாரருக்கு சொந்தமான பணம் ரூ.1,50,000/-த்தை மனுதாரரிடம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. எனவே, மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய ***Sunderbhai Ambalal Desai Vs. State of Gujarat*** உத்தரவின்படியும், மனுதாரர் வசம் அவர் மனுவில் கோரியுள்ள மேற்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மேற்படி பி.ஆர்.எண்.212/2026 ல் தாக்கலான வழக்கு சொத்தான 1)பணம் ரூபாய் 1,50,000/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மனுதாரருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இடைக்காலமாக திருப்பிக் கொடுக்க உத்தரவிடப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>** :–

1. மனுதாரர் ரூ.1,50,000/–க்கு தான் சொந்த பிணை பத்திரமும், மேலும் இரு நபர்கள் தலா ரூ.1,50,000/–க்கு பிணைப் பத்திரமும் எழுதித்தர வேண்டும்.
2. வழக்குச் சொத்தினை 4 கோணங்களில் புடைப்படம் எடுத்து, குறுந்தகடுடன் தாக்கல் செய்ய வேண்டும்.
3. நீதிமன்றம் வேண்டும் போதும், விசாரணையின் போதும் மேற்படி சொத்தினை ஆஜர்படுத்த வேண்டும்.
4. வழக்குச் சொத்தினை குற்ற செயலுக்கு உபயோகப்படுத்தக் கூடாது.
5. மேற்படி வழக்குச் சொத்தினை **Judicial form No.82 in order to Rule 257(1) of criminal rules of practice 2019** ன் படி பஞ்சநாமா தயார் செய்து இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 3ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.08.03 14:30:11 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.